காட்சி கூடம் உரை மொழிபெயர்ப்புகள்

Life
IN EDO





காட்சி கூடத்தின் வரைபடம்

எடோவில் வாழ்க்கை x கியோட்டோவில் ரஸ்ஸல் வோங்

1 எடோவில் வாழ்க்கை

டோக்குகவா ஷோகனேட் 1603-ஆம் ஆண்டில் இந்த நகரத்தை உருவாக்கி அங்கு அவர்களின் அரசாங்கத்தை நிறுவிய பின்னரே எடோ (இன்றைய டோக்கியோ) ஒரு மெட்ரோபொலிஸ் பெருநகரமாக வளர்ந்தது. ஓராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர், அது உலகத்தின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றாக – ஒரு மில்லியனுக்கும் அதிகமான நகரவாசிகளுடன் பெருநகரமாக ஆகிவிட்டது.
எடோ நகரம் கல்வியாளர்கள், வர்த்தகர்கள், கலைஞர்கள், கைவினையாளர்கள், விதூஷகர்கள் மற்ற பிறர் ஸமுராய் வாள்வீரர்கள் மற்றும் பொழுதுபோக்க விரும்புகிற நகரவாசிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறவர்களை ஈர்க்கும் காந்த நகரமாகியது.

250 ஆண்டுகளுக்கும் மேலாக டோக்குகவா ஆட்சி (1603–1867) நிலவியபோது, ஜப்பானிய கலை எடோ நகரத்திலும் மற்றும் கியோட்டோவிலும், அக்காலத்தில் 1869-ஆம் ஆண்டுவரை தலைநகராகவும், சக்கரவர்த்தியின் இல்லமாகவும் விளங்கிய நகரத்தில் உருப்பெற்றது.

உகியோ 浮世

நேராடியான மொழிபெயர்ப்பில், உகியோ என்றால் "மாறிக்கொண்டிருக்கும் உலகம்" என்று பொருள்படும், அதற்கேற்ப நகரம் " தற்கால, நவீன பாணிக்கேற்ப நீரோட்டத்தின் போக்கில் சென்று கொண்டிருந்தது" அக்கால அறிஞர்கள் இதைக் கற்பனை அரசோச்சும் இடமென வரையறுத்தனர், அங்கே கடக்கும் கணமும் கால மாற்றங்களும் அதனதன் இயல்பிற்காகவே

கொண்டாடப்பட்டன. இவ்வாறாக, மனமகிழ் கேளிக்கை இல்லங்களும் கலையரங்க வட்டாரங்களும் எடோ, கியோட்டா மற்றும் ஒசாகா நகரங்களின் கவர்ச்சிக்கு மக்களின் கற்பனைக் களமாகின. உகியோ-இ (இ என்றால் படம் என்று பொருள்) ஜப்பானிய அச்சுக்கலை மற்றும் ஓவியங்கள் இக் காலக்கட்டத்தில் காலத்தை கலையில் சிறைப்பிடிக்கும் கலைப்படைப்பு வகைகளாகின.

கலைப்பாணி கருத்தியல்கள்

இன்று, உகியோ-இ அச்சுக்கலை எடோ காலக்கட்டத்தில் மக்கள் ஆர்வம் கொண்டிருந்தவை என்ன என்பதையும் மேலும் நாம் ஜப்பானை எவ்வாறு நோக்குகிறோம் என்ற கற்பனைக்கும் வடிவம் கொடுத்தது. எடோ குடிமக்கள் உகியோ-இ அச்சுக்கலையை இன்றுள்ள நிலையில் Instagram, TikTok, Twitter மற்றும்

பிற சமூகஊடகத் மேடைகளில் நாம் எவ்வாறு ஈடுபாடு காட்டுகிறோமோ அதே போன்ற ஆர்வத்தைக்காட்டி அதைத் துய்த்தனர்.

இந்த அச்சுக்கலையும் ஓவியங்களும் இந்தக் கண்காட்சியில் சுமார் 250 ஆண்டுகால டோக்குகவா ஷோகனேட் ஆட்சியின் வரலாற்றை கலாசாரப் போக்காக நமக்குக் காட்டுகின்றன. இந்த கலைப்படைப்புகள் மூலம், நாம் இந்த நிலையா அழகியலையும் எடோவின் நகரவாழ்வு, கலாசாரப் போக்குகள் அத்துடன் நகரத்தையும் அதன் மக்களையும் கொண்டாடுகிறோம். இன்றும் நாம் இவற்றுள் பல பாரம்பரியங்கள், பண்டிகைகள் மற்றும் கலை வடிவங்களைக் காண முடிகிறது. அவை ஜப்பானில் தகவமைத்துக்கொண்டு நீடுநிலவிப் பிழைத்திருக்கின்றன.

2 டோக்கைடோ பாதையில் பயணம்

ஷோகன் டோக்குகவா லேயசு ஜப்பானின் ஆட்சியைத் தனது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ளும் முன்பு, அவர் எடோவிற்கு வருகின்ற மற்றும் எடோவிளிரிந்து வெளியிலுள்ள பிராந்தியங்களுக்குச் செல்லும் சாலைகளை மேம்படுத்தும் பணிகளைத் தொடங்கினார். டோக்கைடோ சாலை உடன் தொடங்கி, இந்த ஷோகனேட் பின்னர் கிஸோக்கைடோ (அல்லது நகசெண்டோ), நிக்கோ டோச்சு, ஒஷு டோச்சு மற்றும் கோஷு டோச்சு ஆகியவற்றை பின்தொடர்ந்த ஆண்டுகளில் அமைத்தார். இந்தச் சாலைகள் அனைத்தும் ஒன்றாக கோக்கைடோ (ஐந்து சாலைகள்) என்றழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு சாலையின் வழிநெடுகிலும் நிலையங்கள் அமைந்து பயணிகளுக்குச் சேவைகள் வழங்கின, மேலும்

போக்குவரத்தையும் சரக்குகளையும் கட்டுப்படுத்தின.

மிகவும் பிரபலம் அதிகரித்த சாலைகள்

17- ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், டோக்கைடோ – எடோ நகரத்தையும் அரசின் தலைநகரமான கியோட்டோ நகரையும் இணைத்த சாலை – இந்தச் சாலை முக்கியமாக ஷோகனேட் அதிகாரிகள், டாய்மோய்கள் (ஷோகனின் ஜமீன்தாரி குறுநிலப் பிரபுக்கள்) மற்றும் சீனாவின் தூதர்களும் பிற நாட்டு அரசுகளின் தூதர்களும் இந்தச் சாலைகளைப் பயன்படுத்தினர். நிலையங்கள் உருவாக்கப்பட்டு செழிப்படைந்தன மேலும் மக்கள் பயணிகளுக்குச் சேவைகளையும் பொருட்களையும் பயணிகளுக்கு விற்பது மூலமும் செழிப்படைந்தனர். மத்திய 18-ஆம் நூற்றாண்டில், சாமானியர்களில் வசதிபடைத்தவர்கள் கூட

பயணித்தல் பிரபலமடைந்தது. பல விடுதிகளிலும் கடைகளிலும் சிறப்பு பொருட்கள் மற்றும் பயணியர் நினைவுப்பொருட்கள் விற்கப்பட்டன.

சுற்றுலாத் தொழில்துறை மேம்படுதல்

சுற்றுலாவின் எழுச்சி வரைபடங்கள் மற்றும் வழிகாட்டிகள் அத்துடன் பயண நினைவலைக் கதைகள் ஆகியவற்றின் வெளியீடுகளை ஊக்குவித்தன. டோக்கைடோச்சு ஹிஜகுரிகே (ஷான்கின் குதிரை) என்ற தலைப்பில் ஜிப்பன்ஷா இக்கு எழுதிய காமிக் புதினம் குறிப்பிட்டுக் கூறுமளவுக்கு வெற்றிபெற்றது. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், முன்பெப்போதும் இல்லாத அளவில் பயணித்தல் மிகவும் பிரபலமடைந்தது. எடோ குடிமக்கள் அருகிலுள்ள இடங்களான நரிட்டா, ஒயாமா எநோஷிமா ஆகிய நகரங்களுக்கு வருகை

புரிந்தனர். சிலர் வாழ்நாளில் ஒருமுறை மேற்கொள்ளும் புனிதப்பயணங்களை இஸி பெரிய கோயில் அல்லது ஷிகோகு தீவில் உள்ள கொன்பிரா கோயில் ஆகிவற்றுக்கு பயணம் மேற்கொண்டனர். இந்தப் பயணங்கள் இன்றும் உள்ளூர், சர்வதேசப் பயணிகள் ஆகிய இரண்டு மட்டங்களிலும் பிரபலமாக உள்ளன.

கோக்கைடோவிலிருந்து வந்த காட்சிகளும் கதைகளும் கலைஞர்களின் கற்பனையை ஈர்த்தது, அவர்கள் அவற்றை அழகிய அச்சுக்கலை மற்றும் ஓவியங்களாகப்படைத்தனர்; அந்தப் படைப்புகள் கால தேச நிகளைத் தாண்டி மக்களின் கவனத்தை ஈர்த்தன.

3 எடோவில் அழகு

எடோ காலம் (1603–1868) சமூகக் கட்டுப்பாடுகளின் காலமாக இருந்தது. சமூக வர்க்கம், வயது, தொழில், பிரதேசப் பின்னணி மற்றும் திருமண நிலை ஆகியவற்றைப் பொறுத்து ஆடை அணிமணிகள், தலைமுடி அலங்காரங்கள் மற்றும் வாசனைத்திரவியங்களின் புழக்கம் ஆகியவற்றில் கட்டுப்பாடுகள் இருந்தன. இருப்பினும் பெண்களும் – ஆண்களும் – பின்னரும் தங்கள் தனிப்பட்ட தன்மையை பாணிகள், ஒப்பனைகள் மற்றும் துணை அணிமணிகள் ஆகியவற்றின் மூலமாக வெளிப்படுத்தினர்.

கருமையான நீண்ட தலைமுடி

பெண்களின் தலைமுடி அலங்காரம் அழகைப் பற்றிய அவர்களின் சொந்தக் கருத்தை பிரதிபலிக்கின்றன. ஹையன் காலம் (794 - 1185) முதல், கருமையான நீண்ட

தலைமுடி ஜப்பானிய பெண்களுக்கு முக்கியமானதென்றும் பெண்மை அழகை மதிப்பிட முக்கிய அம்சம் என்றும் கருதப்பட்டது. எடோவிற்கு முன்னர், பெண்களின் தலைமுடி நீண்டதாக கட்டிவைக்கப்படாமல் அல்லது இயல்பாக முதுகில் புரளும்படியாக மென்மையாகக் கட்டி வைக்கப்பட்டிருந்தது. எடோ காலத்தின்போது, நூற்றுக்கணக்கான வெவ்வேறு பாணிகள் தோன்றின.

நடிகைகளும் அரசவை நடனமாதுகளும் புதிய போக்குகளை உருவாக்கினர்

காபுக்கி பெண்கள் நடிகைகளும் நடனமாதுகளும் தங்கள் தலைமுடியை வெவ்வேறுவித பாணிகளில் கட்டிவைத்து அலங்கரித்துக் கொண்டனர். ஒவ்வொரு பாணியும் பொதுமக்களிடையே

பிரபலமடைந்தன. தலைமுடி துணை அணிமணிகள் ஒரு இலாபகரமான வணிகமாக ஆகியிருந்தது. பெண்கள் பாரம்பரியமாக சீப்புகளையும் (குஷி) மற்றும் கொண்டைஊசிகளையும் (கான்ஜாஷி மற்றும் கொகாய்) அவர்களின் தலைமுடியை அலங்கரிக்கப் பயன்படுத்தினர். இந்த துணை அணிமணிகள் இன்றளவும் பிரபலமாகவே உள்ளன

அழகுச்சாதனங்கள்

நற்பழக்க வழிகாட்டிகள் பெண்களுக்கு அழகுச்சாதனங்களை முறையாகப் பயன்படுத்துவது பற்றிய விவரமான குறிப்புகளை வழங்கின. நிறப்பலகையில் அடிப்படையான மூன்று நிறங்கள் இருந்தன: சிவப்பு (உதடுகள், கன்னங்கள், விரல்நகங்கள்) வெள்ளை (முகச் சுண்ணம்), கருப்பு (பற்கள், கண்புருவங்கள்) பற்களை கருப்பாக்கிக் கொள்வதும், கண்

புருவங்களுக்குச் சாயம்மேற்றிக் கொள்வதும் வாழ்க்கை நிகழ்ச்சிகளுடன் தொடர்பு படுத்தப்பட்டன – வயதுப் பக்குவம் அடைதல், திருமணம் மற்றும் குழந்தைப்பெறு ஆகியவை. உதாரணமாக, பற்களை கருப்பாக்கிக் கொள்வது ஒரு பெண் வயதுப் பக்குவம் அடைந்தவள் அல்லது திருமணமானவள் என்பதைச் சுட்டிக்காட்டியது. பெண் முதலாம் குழந்தையைப் பெற்றெடுத்தால் அவளது கண் புருவங்களை மழித்துக்கொள்வாள்.

4 செல்லப்பிராணிகள் பெருகுதல்

இன்றைய நாட்களைப் போலவே, எடோ மக்களும் செல்லப் பிராணிகளை நேசித்தனர் பூனைகள், நாய்கள், பறவைகள் மற்றும் தங்கமீன்கள் மிகவும் பிரபலமாக இருந்தன. விசேட

வெளிநாட்டு விலங்குகளும் ஜப்பானுக்குக் கொண்டுவரப்பட்டன: நெருப்புக்கோழி (1658), கேனரிகள் (1709), முதலை (1780), ஒராங்-உட்டான் (1792), வெள்ளைக் கரடி (1799), சிங்கம் (1865). பல விலங்குகள் ஷோகனுக்குப் பரிசுகளாக வெளிநாட்டு ஆட்சியாளர்களால் அனுப்பப்பட்டவை ஆகும்.

பூனைகள்

ஜப்பானிய மக்கள் பூனைகளுடன் நெடுங்காலமாகத் தொடர்பு கொண்டிருந்தனர். சக்கரவர்த்தி உடாவின் (867–931) அரச நாட்குறிப்பில் அவரது கருப்புப் பூனையைப்பற்றிய குறிப்பு உள்ளது, இது அதன் உடலியல் பண்புகளையும் வேடிக்கையான நடத்தையையும் குறிப்பிடுகின்றது. *Pillow Book (Makura no Sōshi)* எனும் 1002-ஆம் ஆண்டு சேய் சோனகனால் எழுதப்பட்ட புத்தகத்தில் சக்கரவர்த்தி இக்கிஜோ

வைத்திருந்த பூனையைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஸமுராய் மற்றும் சமானியர் வீடுகளில் பூனைகளைச் செல்லப்பிராணிகளாக வளர்ப்பது பிரபலமாக (எலிகளைக் கொல்வதற்கு நல்ல உதவியாக) இருந்தது. உகியோ கலைஞர்கள் உடாகவா குனியோஷியும் உடாகவா ஹிரோஷிகேயும் அவர்களின் படைப்புகளில் பூனைகளையும் படைத்துள்ளனர்.

நாய்கள்

ஜப்பானின் ஜோமோன் வேடர் பழங்குடியினர் நாய்களை கூட்டாளிகளாக வைத்திருந்தனர் மேலும் அவற்றுக்கு நேசமுடன் ஈமச்சடங்குகளை செய்துள்ளனர். 15 மற்றும் 16ஆம் நூற்றாண்டு மடக்கப்படும் திரைகளில் நாய்களின் படங்கள் இடம் பெற்றிருந்தன. எடோ கால மரபட்டை

அச்சுகளிலும் ஓவியங்களிலும் நாய்கள் செல்லப்பிராணிகளாக நேசிக்கப்பட்டது படங்களில் காட்டப்பட்டுள்ளன. சிறிய நாய்கள், குறிப்பாக ஜப்பானிய ஷின் இனம், மேட்டுக்குடிகள், ஸமுராய் மற்றும் செல்வந்தக் குடும்பப் பெண்களின் செல்லப்பிராணிகளாக மிகமிகப் பிரபலமாக இருந்தன.

5 தங்கமீன்கள்

1500-ஆம் ஆண்டுகளில் சீன வர்த்தகர்களால் கொண்டுவரப்பட்டு, தங்கமீன்கள் மேட்டுக்குடிகள், ஸமுராய்களுக்கு சிறப்பு செல்லப்பிராணிகளாக விற்கப்பட்டன. பிறகு அவை பிரபலமான செல்லப் பிராணிகள் ஆகின. கோடைக்காலங்களில், பண்டிகைகளில் கிங்கியோ-சுகோய் – காகிதக் கரண்டியால் உயிருள்ள தங்க மீனை நீரிலிருந்து

கோரி எடுக்கும் பாரம்பரிய விளையாட்டை விளையாடியுள்ளனர். தங்கமீன்களை வளர்ப்பதற்காக வண்ணமயமான கண்ணாடி மற்றும் களிமண் கோப்பைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

தங்கமீன்கள் மரப்பலகை அச்சுக்கலையிலும் பிரபலமாக இடம் பெற்றுள்ளன. அவற்றின் இலாகவமான நீந்துதல்கள் “மிதக்கும் உலகம்”என வருணிக்கப்பட்டன. சில வகைகள் அவற்றின் நீண்ட, அழகிய துடுப்புகளுடன் நீரில் அழகிய அசைவுகளுடன் நீந்துவதற்காக வளர்க்கப்பட்டன. உட்டகவா குனியோஷி அவரது ஓவியங்களில் தங்கமீன்களின் படங்களுக்காக புகழ்பெற்றுள்ளார்.

பிற விலங்குகள்

செல்லப்பிராணிகளாக வளர்க்கப்படாத விலங்குகளும் மரப்பலகை அச்சுக்கலையில் தோன்றுகின்றன. வேட்டைக் கழுகுகளுடன் (டககாரி), பிற பறவைகளை வேட்டையாடும் பொழுதுபோக்கு ஸமுராய்களிடம் பிரபலமாக இருந்தது. குரங்காட்டிகள் (சாருமாவஷி) குரங்களைப் பழக்கி வேடிக்கை காட்டியுள்ளனர். கிராமப்புறங்களில் பசுக்கள் மற்றும் குதிரைகள் விவசாயம் மற்றும் பயணத்துக்காகப் பயன்படுத்தப்பட்டன. கிளிகள், ஒட்டகங்கள் மற்றும் யானைகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யபட்ட அபூர்வ விலங்குகளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

6 எடோவில் உணவுக்கலை

கோக்கைடோ (ஐந்து வழிப்பாதைகள்) நெடுஞ்சாலைகள் வேறு பிரதேசப் பொருட்கள் எடோ நகருக்குக் கொண்டுவரப்படுவதை எளிதாக ஆக்கின. இது அனைவரும் புதிய உணவுகளையும் புதிய சமையல்முறைகளைப் பின்பற்றவும் அனுமதித்தது. மரப்பலகை அச்சுக்கலை நமக்கு எடோ குடிமக்கள் நேசத்துடன் உண்டுவந்த விசேட உணவு வகைகளைக் காட்டுகின்றன. நிகோன்பாஷி நதியின் வடக்குக்கரை ஓரம் உண்ணப்பட்டுவந்த புதிய பருவகால கடல் உணவுகளைப் பற்றி அறிகிறோம். இங்குள்ள மீன் சந்தை 17-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது ட்சுகிஜி சந்தை 1935-ஆம் ஆண்டு திறக்கப்படு முன்பு, 300 ஆண்டுகளுக்கும் மேலாக மக்களுக்குச் சேவையை வழங்கியுள்ளது.

ஆத்ம உணவு

எடோவின் “ஆத்ம உணவாக” நமக்கு நினைவில் வருவது சோபா (பக்வீட் நூடுல்ஸ்) மற்றும் நிகிரிஜுஷி (நாம் “ஷுஷி” என அழைப்பது) – புதிய மீன் இறைச்சியிலிருந்து தயாரிக்கப்பட்டு வினிகர் சேர்க்கப்பட்ட சாதத்துடன் நோரி கடல்பாசி உடன் அல்லது இல்லாமல் பரிமாறப்படுகிறது.
இந்த சமையற்கலைப் படைப்புகள் பழமையானது, ஆனால் அவை எடோ காலத்திய முறைகளை புதுப்பித்து மேம்படுத்தப்பட்டவை ஆகும். சோபா அதன் எளிமை மற்றும் பல வழிகளில் உண்ணப்படுவதன் காரணமாக பிரபலமடைந்தது.
சிறப்பான கத்திகள் (சோபா கிரி) இந்த நூடுல்களை உருவாக்கப் பயன்படுத்தப்பட்டன. எடோ நகரின் ஒவ்வொரு அண்டைஅயல்களும் ஒன்று அல்லது இரண்டு சோபா கடைகளைப் பெற்றிருக்கும்.

உயர்வகை உணவகங்களும் உணவுக் கடைகளும்

இன்றைய ஷூஷி பிந்தைய எடோ காலத்தில் (1820s–30களில்) மிகவும் பிரபலமானது. அந்த நாட்களில், ஏற்கனவே உயர்வகை ஷூஷி உணவகங்களும் உணவுக் கடைகளும் இருந்தன, அவை ஷூஷி மட்டுமல்லாது ஈல் கபாயாகி மற்றும் டெம்பூரா ஆகிய வகைகள் விற்கப்டுகின்றன, அவற்றைப் பொதுமக்களும் வாங்கி உண்பதற்கு கிடைக்கின்றன.

கைசெகி மற்றும் உணவு வழிகாட்டிகள்

புதுமை உணவகங்கள் அரிதான, ஆடம்பரமான பதார்த்தங்களுடன் உணவை விற்க தொடங்கிய எழுச்சி கைசெகி-ரையரி (பாரம்பரிய) ஜப்பானிய பன்மைப் பரிமாறல் சிறப்பு விருந்துகளை நிறுவுவதற்கு அடிகோலியது.

இந்த உணவகங்களில் பெரும்பாலானவை நகரத்திற்கு வெளியே அமைந்துள்ளன மேலும் சில இரண்டாம் தளத்தில் ஒரு பூந்தோட்டத்தைப் பார்த்தவாறு அமரும் இடவசதியைப் பெற்றுள்ளன. இவ்வாறாக, பன்முனை உணர்வு அனுபவங்களைப் பெற ஏதுவாக சமையற்கலைஞர் அல்லது உணவக உரிமையாளரால் அமைக்கப்படுகின்றன. இந்த மிகவும் போட்டி நிறைந்த உணவுத் தொழில் உணவு விரும்பிகளாலும் பயணிகளாலும் ஆதரிக்கப்பட்டன மேலும் அவை வழிகாட்டிப் புத்தகங்களுக்கான தேவையையும் உருவாக்கியது. உகியோ கலைஞர்கள் படைத்த அச்சுக்கலை மற்றும் ஓவியங்கள் இந்த உணவுக் கலாசாரம் பரவுவதற்கு முக்கியமான பங்களிப்பை அளித்தன.

7 பூந்தோட்டங்கள் – பூக்களுக்கான நேசம்

பழங்கால காலச்சுவடு ஏடுகள் தானிய வகைகள், கட்டிடப்பயன் மரங்கள், செர்ரிப் பூக்கள் மற்றும் கேமெல்லியா பூக்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றன – இவ்வாறு தாவரங்களை அவற்றின் அழகுக்காக நேசிக்கும் நீண்ட வரலாறு ஜப்பானில் உள்ளது. எடோ காலத்தில், தோட்டப்பராமரிப்பாளர்கள் தவரங்களைச் சேகரித்தனர், சிலர் அவற்றின் அரிதான குணங்கள் அல்லது கண்டுபிடிப்புகளால் ஈர்க்கப்பட்டு அவற்றை வளர்க்க ஒரு சரியான தொட்டியைத் தேடும் மோகம் கொண்டவர்களாக இருந்தார்கள். இந்த சிறப்புச் சேகரிப்புகளை ஆவணமாகக் கொண்ட படங்கள் நிறைந்த புத்தகங்கள் வெளியிடப்பட்டன.

சாமந்திப்பூக்கள் – கிக்கு

சாமந்திப்பூக்கள், இலையுதிர்காலத்தில் பூக்கும் பூக்கள் ஜப்பானில் மிகமிகப் பிரபலமானவை. இவை நீண்ட ஆயுளின் குறியீடாக, எப்போதும் அரசபரம்பரைக் குடும்பத்துடன் தொடர்புபடுத்தப்பட்டன. சாமந்திப்பூக்கள் நாரா காலத்தில் (710–94) சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்டன. காமகுரா காலத்தில் (1185–1333) சாமந்திப்பூ வடிவமைப்பு அரச குடும்பத்தின் குறியீடாக ஆகியது.

பூந்தோட்டக்காரரர்களாக ஆகுதல்

எடோ காலத்தில் நிலவிய அரசியல் ஸ்திரநிலையுடன், பூந்தோட்டக் கலாசாரம் மேம்பட்டது. டாய்மோ நிலஉடமைகளை மேலாண்மை செய்த ஸமுராய் வர்க்கத்தினர் வழிகோலிய இந்தப் பூந்தோட்டப் பராமரிப்பு விரைவில்

பொதுமக்களாலும் பின்பற்றப்பட்டது. மூன்று தலைமுறை டோக்குகவா (இயஸூ, கிட்டேதடா மற்றும் இயமிட்ஸூ) குடும்ப உறுப்பினர்கள் பூக்களை நேசித்தவர்கள் ஆவர் – குறிப்பாக கேமெல்லியா மலர்களை நேசித்தவர்களாவர். பல டாய்மோ (நிலச் சுவான்தாரப் பிரபுக்கள்) மேட்டுக்குடியினரும் இந்தப் பொழுதுபோக்கைக் கடைப்பிடித்தனர். அவர்கள் தமது நிலங்களில், காய்கறிகள், மருத்துவத் தாவரங்கள் இவற்றுடன் அழகுக்காக வளர்க்கப்படும் தாவரங்களையும் வளர்த்தனர். மலர்கள், தொட்டிச் செடிகள் மற்றும் நாற்றுகள் ஷோகன், டாய்மோ குடும்பங்களுக்கிடையில் பரிசுகளாக பரிமாறிக்கொள்ளப்பட்டன. உழைக்கும் வர்க்கம் மற்றும் சமானியர்களிடமும் தோட்டக்கலை ஒரு முக்கியமான பொழுதுபோக்காக ஆகியது. செடி மற்றும் மலர்களை

விற்கும் வியாபாரிகளின் நடமாட்டமும் குரலும், அவர்கள் தோளில் சுமந்து கம்புகளில் தொங்கிய கூடைகளில் உள்ள மலர்த் தாவரங்கள் நகரத்தில் எங்கும் நிறைந்த காட்சியானது.

ஹனாமி – பூக்களைப் பார்த்தல்

முரோமாச்சி காலத்திற்கும் (1336–1573) ஆரம்ப எடோ காலத்திற்கும் இடையில், பூக்களைப் பார்த்தல் (*ஹனாமி*) சுற்றுலாக்கள் பிரபலமடைந்தன. டாய்மோகள் பெரிய ஆடம்பர நிகழ்ச்சிகளை, புகழ்பெற்ற டாய்கோ-நோ-ஹனாமி விழாவாகிய, கியோட்டோவில் டாய்கோ-ஜி கோயிலில் செர்ரி பூக்களைப் பார்த்தல் கொண்டாட்டம் உட்பட நடத்தினர் *ஹனாமி* மிகவும் முன்னதாகவே தொடங்கியது. ஆனால் ஷோகன் யோஷிமுனே (1716–45 ஆட்சிசெய்தவர்) செர்ரி மரங்களை பொதுமக்களுக்காக நட்டு வளர்த்தலிருந்து பிரபலமடைந்தது.

8 பருவகால விழாக்கள்

பருவகால விழாக்கள் மற்றும் ஓய்வுநேரச் செயற்பாடுகள், அனைத்துத் தரப்பு மக்களாலும் மகிழ்ந்தனுபவிக்கப்பட்டன, இது உகியோ கலைஞர்களின் படைப்புகளில் இடம்பெறுகிற கருப்பொருளாக அவர்களுக்கு உத்வேகம் வழங்கின. இன்றும், இந்த விழாக்கள் நடைபெறுகின்றன. மேலும் அச்சுக்கலை படைப்புகள் மதிப்புமிக்க வரலாற்றுப் பதிவுகள் போல பாதுகாக்கப்படுகின்றன, இது அவற்றின் பாரம்பரியமும் வழக்காறுகளும் எவ்வாறு காலம்கடந்து நிலைபெறுகின்றன அல்லது பரிணாமம் பெறுகின்றன எனக் காட்டுகின்றது.

***கொசெக்கு* 五節句** – ஜப்பானிய அரசவையில் ஐந்து பருவகால விழாக்கள் கொண்டாடப்பட்டன; அவை எடோ காலத்தில்

அதிகாரப்பூர்வ விடுமுறைகளாக ஆக்கப்பட்டன. சந்திரச் சுழற்சி நாட்காட்டியின் சில நாட்கள் ஒருவரின் வாழ்வில் முக்கியத்துவம் பெறுகின்றன என்ற கருத்தின் அடிப்படையில், பருவகால உணவு மற்றும் மலர்களுடன் இந்த நிகழ்வுகள் கொண்டாடப்பட்டன.

***ஜிஞ்சிட்சு* 人日**, "மானுட நாள்" – 1-ஆம் மாதத்தின் 7ஆம் நாள், புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் பகுதியாகக் கொண்டாடப்படுகிறது.

***ஜியோஷி/ஜியோமி* 上巳** – 3-ஆம் மாதத்தின் 3-ஆம் நாள் – மோமோ நோ செக்கு (பீச் விழா). அரசப் பிரதானிகளும் அதிகாரிகளும் அரண்மனைத் தோட்டத்தில் உள்ள நீரோடையில் அரிசி மதுக்கோப்பைகளை மிதக்க விடுதல். ஒவ்வொரு விருந்தினரும் ஒரு மிடறு அருந்தி ஒரு கவிதையை

தொடுத்தல். பொம்மை தினம் (ஹினமட்சுரி) இன்றும் மார்ச் 3-ஆம் நாள் இது கொண்டாடப்படுகிறது.

டேங்கோ **端午** – 5-ஆம் மாதம் 5ஆம் நாள் – அயமே நோ ஹி (ஐரிஸ் விழா); கோடை மற்றும் மாரிக்கால தொடக்கத்தைக் குறிக்கிறது. மே 5-ஆம் நாம் இப்போது குழந்தைகள் தினமாகக் (கொடோமோ நோ ஹி) கொண்டாடப்படுகிறது, மேலும் அது தேசிய விடுமுறையுமாகும்.

ஷிசெகி ***七夕*** – 7-ஆம் நாள் 7-ஆம் மாதம் – டனபட்டா; வருடாந்திர நெசவாளி (வேகா) மற்றும் இடையன் (அல்டைர்) நட்சத்திரமண்டலத்தைக் கடக்கும் நாள் ஆகக் கொண்டாடபப்டுகிறது.

ஷோயோ **重陽** – 9ஆம் நாள் 9-ஆம் மாதம் – சாமாந்திப்பூ விழா (கிக்கு நோ செக்கு), மேலும் இது இலையுதிர்கால

அறுவடை காலம் ஆகும்.

பிற செயற்பாடுகள்

கொசெக்குடன் கூடுதலாக,
பிற பிரபலமான பருவகால
செயற்பாடுகளும் உள்ளன.
வசந்தகாலத்தில், செர்ரி மலர்களைப்
பார்ப்பது மலைகளுக்குச்
சென்று சுற்றுலாக் காட்சிகளைக்
காண்பதுடன் இணைந்து
இரட்டிப்பு மகிழ்ச்சியாகும். மார்ச்
அல்லது ஏப்ரல் மாதங்களில், தாழ்
ஓதத்தின்போது சிப்பிகளைத்
தேடிக் குழிபறிப்பது விருப்பமான
பொழுதுபோக்காகும்

கோடையில், நதிகள்
வற்றிப்போகும்போது, பலர்
சுமிடகவா வாணவேடிக்கை
விழாவை நாடுகின்றனர். டிசம்பர்
பின்னாளில், மோச்சி செய்வதற்காக
அரிசியைப் உரலில் இடித்தல்,
இன்னொரு நீண்டகாலமாக

நீடிக்கும் ஜப்பானிய வழக்கம் ஆகும். இது பழைய ஆண்டின் முடிவையும் புதிய ஆண்டின் தொடக்கத்தையும் குறிக்கிறது. தெய்வத்தை வணங்குபவர்கள் இந்த மோச்சியை கடவுளுக்குப் படைத்து தாமும் எதிர்வருகின்ற ஆண்டில் நலமுடன் வாழப் பிரார்த்தித்து அரிசி கேக்குகளை உண்கின்றனர்.

9 கலைஞரின் அசல் ஓவியங்கள்

மரப்பலகை அச்சுக்கலை மேற்கத்திய உலகின் கவனத்தை ஈர்த்தாலும் – அவற்றின் வரைகலைத் திறமைக்கு மறுப்பேதும் இல்லை – இதைப் படைத்த கலைஞர்கள் தம்மையும் ஒரு ஓவியராகவே பாவிக்கின்றனர். அவர்கள் பெரும்பாலும் தமது அச்சுக்கலை மற்றும் ஓவியப் படைப்புகளில் "எனது தூரிகையிலிருந்து" என்றே கையொப்பமிடுகின்றனர்.

சில கலைஞர்கள் தமது புகழ் நிலைபெற்ற உடன் அச்சுக்கலையைக் கைவிட்டு முழுநேர ஓவியர்களாகிவிட்டனர்.

புரவலர்கள்

பிரபலமடைந்த ஒரு கலைஞர் தனிப்பட ஒப்படைக்கப்பட்ட படைப்பு வேலைகளை அதை நேரடியாகச் சேகரிப்பவரிடமிருந்து அல்லது ஒரு முகவர் மூலம் பெறுகிறார். வழக்கமாக இந்த ஆர்டர்கள் தொங்கவிடப்படும் ஸ்க்ரோல்களுக்காக இருக்கும். அரிதாக நியமிக்கப்படும் வேலைகள் மரப்பலகையின் மீது அல்லது மடிப்பு திரைகளின் மீது வரையப்படும் ஓவியங்கள் ஆகிவற்றை உள்ளடக்கும். ஒரு கலைஞரின் திறமைக்குச் சோதனையாக ஒரு கலைஞரை ஓவியம் வரையப்பணிக்கப்படுதல் கருதப்படுகிறது. அவர்கள் தம்மை

முழுமையாக வெளிபடுத்துவதற்காக தூரிகை கோடுகள், தீற்றல்கள் மேலும் தேர்ந்தெடுக்கும் வெவ்வேறு வர்ணங்கள், மற்றும் எடுத்தாளும் கருப்பொருளை எவ்வாறு மனச்சித்திரமாக அல்லது மெய்ப்பாட்டியல் ஓவியமாகத் தீட்டுவதென முடிவெடுக்கலாம். ஜப்பானில், இந்த வகை ஓவியங்கள் நிக்குஹிட்சுகா (அசல் ஓவியங்கள்) என்றழைக்கப்படுகின்றன.

நிக்குஹிட்சுகா 肉筆画

நிக்குஹிட்சுகா தூரிகை மற்றும் வர்ண மை கொண்டு காகிதம் அல்லது பட்டின் மீது வரையப்படுகிறது. இவற்றைப் படைக்கும் கலைஞர்கள் பெரும்பாலும் மரப்பலகை அச்சுக்கலை படைப்புகளுக்காக ஓவியங்களைப் படைத்தவர்களாக இருந்தார்கள். இவ்வாறு, பலர் கருப்பொருள் மற்றும் பாணியில்

உகியோ-இ அச்சுக்கலைக் கருப்பொருட்கள் உடன் நெருக்கமாக இருக்கிறார்கள். இன்று *நிக்குஹிட்*சுகா என்ற இச்சொல் பொதுவாக தூரிகையால் வரையப்படும் 16 மற்றும் ஆரம்பக்கட்ட 17ஆம் நூற்றாண்டு ஓவியங்களுக்குப் பொருந்தும். இது 19 மற்றும் ஆரம்பக்கட்ட 20-ஆம் நூற்றாண்டு நவீன படைப்புகளாகிய நிஹோங்கா (பாரம்பரிய ஜப்பானியஓவியம்) கலைஞர்களையும் விவரிக்கிறது

10 உகியோ-இ உற்பத்தி

அதிக எண்ணிக்கையில் உற்பத்தி மரப்பலகை அச்சுக்கலையை பிரபல கலாசாரத்தின் உட்கூறாகா ஆக்கியது. அவை முக்கியமான தகவல் ஊடகமாகவும் போற்றப்படும் கலையாகவும் இருந்தது. உகியோ-இ போட்டி மிகுந்த சந்தையாகிவிட்டது,

மேலும் கலைஞர்களும் வெளியீட்டாளர்களும் மக்களின் ஆர்வங்களை தடமறிந்து மக்களைக் கவரும் படங்களை உருவாக்க அயராது உழைத்தனர்.

உழைப்பைப் பகிர்தல்

உகியோ-இ அச்சுக்கலை படைப்புகள் பெரும் எண்ணிக்கையில் தயாரிக்கப்பட்டு புத்தகக்கடைகளில் (*இஜோஷியா*) விற்கப்பட்டன. இவை ஒரு வெளியீட்டாளர் (*ஹன்மோட்டோ*), வடிவமைத்த (*இஷி*) ஒரு கலைஞர், அச்சுத் தொகுப்பை செதுக்கிய கலைஞர் (*ஹோரிஷி*) வர்ணங்கள் சேர்த்து ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு வர்ணத்தில் மை தோய்த்து அச்சிட்ட மேலுமொரு கலைஞர் (*சுரிஷி*) ஆகியோரின் கூட்டு முயற்சிக்கு கிடைக்கும் வெற்றிக்கனியாகும்.

அனைத்து வல்லமையும் கொண்ட

வெளியீட்டாளர்கள்

வடிவமைப்பைச் செய்த கலைஞர்கள் மத்திய இடம் பெறுகிறார்கள், ஆனால் வெளியீட்டாளரின் திட்டமிடுதல், செதுக்குபவரின் மற்றும் அச்சிடுபவரின் திறமைகள் விற்பனையில் குறிப்பிடத்தக்க வேறுபாட்டை உருவாக்கும். உகியோ-இ இலாப நோக்கிற்காக உற்பத்தி செய்யப்படுவதால் வெளியீட்டாளரே, கருப்பொருள், கலைஞர்கள், செதுக்குபவர்கள், வர்ணக் கலைஞர்கள் ஆகியோரைப் பணிக்கு அமர்த்துவதிலும் என்ன செதுக்குதல் மற்றும் அச்சிடும் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவது என்பதைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பெற்றுத் திகழ்கிறார். எனவே, உகியோ-இ அச்சுகள் கலைப்படைப்புத் திறமைகளை ஒருங்கிணைத்து இலாபத்திக்காக

அவற்றை இயக்கிச்செயற்படும் வெளியீட்டாளர்களின் ஒருங்கிணைந்த படைப்புகளாக்கும்

உகியோ-இக்கு வரவேற்பு

இந்த உகியோ-இக்கு சாமானியரிலிருந்து பணம்படைத்தார் வகுப்புகள் வரை புரவலர்கள் உள்ளனர். இந்த அச்சுக்கலைப் படைப்புகள் மலிவானவையும் எளிதில் வாங்கப்படுபவையாகவும் இருக்கின்றன. கலைஞர்கள் நிகழ்காலத்தில் இரசிகர்களின் போக்குகளை முன்கூட்டியே ஊகிக்கவும் பாணிகளில் ஒரு படி முன்னே செல்லவும் எதிர்பார்க்கப்படுகின்றனர். இது போன்ற போட்டி மிகுந்த சூழலில், திறமை மிக்க கலைஞர்கள் தலைமுறை தலைமுறையாக எழுந்து, தேவைகள் மற்றும் மரபுச்

சவால்களை வெற்றி கொள்கிறார்கள். பொதுமக்களை திருப்திப்படுத்த கலைஞர் தொடர்ந்து புதிய வடிவமைப்புகளைத் தேடுகிறார்.